சேரவே இல்லை. ஆகவே, மற்றப் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர் இந்தப் பிரிவையும் சேர்த்து பார்த்துக்கொண்டு வந்தார். அந்த இடம் இடையிலே மூன்று மாதம் காலம்தான் காலியாக இருந்தது என்பது அல்ல. இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொள்ளக்கூடிய திறமை படைத்தவர்தான் 3 மாதங்களுக்கு இரண்டு பிரிவுகளையும் பார்த்துக் கொண்டிருந்தார். மாணவர்கள் எண்ணிக்கையும் அதிகமாக இல்லை. 1966-ல் ஜூனியர் பிரிவிலும், சீனியர் பிரிவிலும் முறையே 10, 14 மாணவர்களும், 1967-ல் 21, 7 மாணவர்கள்தான் இருந்தார்கள். இந்த இரண்டு பிரிவுகளையும் சேர்த்து ஒரு ஆசிரியர் பார்ப்பது அதிக கஷ்டமில்லை. சீனியர் பாட்ச்சிலுள்ள 7 மாணவர்கள் தனியாக ஒரு ஆசிரியர் நியமிக்கப்படாவிட்டால் 12-11-1967-லிருந்து உண்ணு நோன்பு இருப்பதாக அறிவித்தார்கள். இதற்கிடையில் இன்னொரு ஆசிரியர் நியமிக்கப்பட்டு அவர் 9-11-1967-ல் வேலையில் சேர்ந்தார். இருந்தும் அந்த 7 மாணவர்கள் திருப்தியில்லாமல் 10-11-1967, 13-11-1967-ல் பள்ளிக்கு வரவில்லை. 14-11-1967-ல் உண்ணுவிரதம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது. 15-11-1967-ல் மாணவர்களே திரும்ப வகுப்புக்கு வந்துவிட்டார்கள். அதற்குப் பிறகு அங்கே எல்லாம் அமைதியாக நடைபெறுகிறது.

திரு. பி. வேலுசாமி: இந்தப் பிரிவில் பயிற்சி பெறுகிறீர்களே, அப்படி பயிற்சி பெறுகிற மாணவர்களுக்கு சர்க்காரில் ஏதாகிலும் இந்தப் பிரிவைச் சேர்ந்த காலி ஸ்தானங்கள் வரும்பொழுது அவர்களுக்கு முதல் முக்கியத்துவம் அளிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: கூடுமானவரையில் ஐ.டி.ஐ.-யில் படித்து வெளியேறுகிறவர்களுக்குத்தான், தனியார் துறையானாலும் சரி, பொதுத் துறையானாலும் சரி, அவர்கள் ஓராண்டு, இரண்டு ஆண்டுகள் தக்க பயிற்சி பெற்றிருக்கிற காரணத்தினாலே, அவர்களுக்கு முதல் சலுகை அளித்து எடுத்துக் கொண்டிருக்கிற சூழ்நிலைதான் இருந்து கொண்டு வருகிறது.

ஏற்றுமதி–இறக்குமதி

* 48 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன்: மாண்புமிகு கல்வி தொழில் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஏற்றுமதி---இறக்குமதிகளைத் தனியார் துறையில் அல்லாமல் பொதுத் துறையிலேயே ஏற்று நடத்த வேண்டுமென்பதை பற்றிய ஆலோசனையை மத்திய சர்க்காரிடம் நமது சர்க்கார் கொடுத்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: (அ) இல்லை.

(இ) இவ் வினு எழவில்லை.

1968 ஆகஸ்ட் 20]

திரு. வி. கே. கோதண்டராமன்: ஏற்றுமதி, இறக்குமதி தனியார் கையில் இருக்கிற காரணத்தினால், நாட்டினுடைய நன்மை பாதிக்கக்கூடிய அளவுக்கு, நாட்டுக்கு தீங்கு ஏற்படக் கூடிய அளவுக்கு நிலைமை இருக்கிறது என்பது அமைச்சர் அவர் களுக்குத் தெரியுமா? நாட்டின் நலனைக் கருதியாவது—வெங்காயம், மிளகாய் இவைகளெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுகிறது—அம் மாதிரிப் பொருள்களை நமது ராஜ்யத்திலிருந்து நமது ராஜ்ய சர்க்காராவது ஏற்றுமதியை மேற்கொள்ளுவதற்கு உத்தே சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசியல் அமைப்புச் சட்டத்தின்படி ஏற்றுமதி, இறக்குமதி 100-க்கு 100 இந்திய அரசின் அதிகாரத்திற்கு உட்பட்டது. ஆகவே, அதைப் பொறுத்து ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமென்றால் இந்திய நாடாளுமன்றத்தில் அதைப்பற்றிய முடிவுகள் எடுத்துச் செய்யவேண்டும். ஆகவே மாநில அரசுக்கு அந்தக் கொள்கை யைப் பொறுத்தவரையிலே எதையும் எடுத்துச் சொல்வதற்கு சட்டப்படி இடமில்லை. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் இங்கே எடுத்துச் சொல்லிய அதே கருத்தை நாடாளுமன்றத்திலுள்ள உறுப்பினர்கள் எடுத்துச் சொல்லி, மத்திய அரசாங்கத்தினர் அதற்கான சட்ட திட்டங்களைக் கொண்டுவர வேண்டும். ஏற்றுமதி, இறக்குமதியைப் பொறுத்தவரையில் மாநில அரசு இந்திய அரசினருடைய கொள்கைக்கு எந்த அளவுக்கு ஒத்துழைப்பு தந்து, கொள்கையை நிலைநாட்டவேண்டுமோ அந்த அளவுக்கு ஒத்துழைப்பை நல்கிக்கொண்டு வருகிறது. அந்த அடிப்படை யில்தான் சிலபல பொருள்களுக்கு சலுகைகள் தரப்பட்டிருக் கின்றன. விற்பனை வரி நீக்கம், சப்ஸிடி போன்ற சலுகைகள் தரப்பட்டு ஏற்றுமதியை அதிகப்படுத்துவதற்கு வழி வகைகள் செய்யப்படுகின்றன. எக்ஸ்போர்ட் பிரமோஷன் செய்வதற்கு பரிசுத் திட்டங்கள் ஏற்பாடு செய்வதன் மூலம் ஏற்றுமதியை விரிவு படுத்தவேண்டும், கூடுமானவரையில் இறக்குமதியைக் குறைத்து, ஏற்றுமதியை அதிகரிக்க வேண்டுமென்ற கொள்கையை இந்திய அரசு கடைப்பிடித்துக்கொண்டிருக்கிறது. ஏற்றுமதி, இறக்குமதி யாரிடம் இருக்கவேண்டுமென்பதுபற்றி மத்திய அரசுதான் முடிவு செய்யவேண்டுமே தவிர, மாநில அரசுக்கு அதற்கும் தொடர்பு இல்லை.

திரு. சோ. அழகர்சாமி: ஏற்றுமதி சம்பந்தப்பட்ட மட்டில் தனியாரிடம் இருப்பதால், அவர்கள் நல்ல சரக்குகளை அனுப்ப வில்லை என்ற காரணத்தினால், சிலோன் போன்ற நாடுகளில் மிளகாய், உள்ளி போன்ற பொருள்களுக்கு இப்பொழுது மார்கெட் குறைந்துகொண்டு வருகிறது. ஆகவே, இதை தனியார் கையில் விடாமல், சர்க்காரே ஏற்றுமதி செய்யவேண்டும் அல்லது கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ஏற்றுமதி செய்யவேண்டும்

என்ற யோசனையை இந்த அரசு மத்திய அரசுக்கு சிபார்சு செய்து, நமது மாநிலத்திலிருக்கிற கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் மூலம் ஏற்றுமதி செய்ய அரசு முயற்சிக்குமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: நான் முதலில் எடுத்துச் சொன்னதுபோல், ஏற்றுமதி, இறக்குமதி மத்திய அரசின் அதிகாரத்திற்குட்பட்டது. ஏற்றுமதி, இறக்குமதி தனியார் துறை மூலம் செய்யப்படுகிறது. சில பொருள்களைப் பொறுத்தவரையில் அரசாங்கமும் வைத்துக்கொண்டிருக்கிறது. ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷன் மூலமும் மாநில அரசு இறக்குமதிக்கு அனுமதி தந்து இறக்குமதி செய்வதற்கு வழி வகைகள் செய்கிறார்கள். இதுபற்றிய முழு அதிகாரமும் இந்திய அரசாங்கத்தின் கையில் இருக்கிற காரணத்தினால், அவர்கள் பார்த்துத் தான் ஏதாவது தக்க மாற்றம் செய்யவேண்டுமென்றால் செய்ய வேண்டிவரும்.

Supply of rice to students' hostels

* 49 Q.—Thiru T. MARTIN : Will the Hon. the Minister for Food and Revenue be pleased to state—

(*a*) whether the educational institutions in Tirunelveli district in informal rationing areas are being supplied with rice on ad hoc quota basis for their pupils in their hostels; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) ஆம், திருநெல்வேலி மாவட்டத்தில் கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ள மாணவர் விடுதிகள் அனைத்திற்கும் வார அடிப்படையில் அரிசி வழங்கப்படுகிறது.

(ஆ) திருநெல்வேலி மாவட்டத்தில், 9 வட்டங்களில் கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்ட 146 மாணவர் விடுதிகளுக்கும் பள்ளிகளுடன் இணைக்கப்பட்டுள்ள 466 நண்பகல் உணவு நிலையங்களுக்கும் அரிசி வழங்கப்படுகிறது.

146 கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்ட மாணவர் விடுதிகளுக்கு ஒரு வாரத்தில் 280 குவிண்டால் அரிசி வழங்கப்படுகிறது. பள்ளிகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் 466 நண்பகல் உணவு நிலையங்களுக்கு ஒரு வாரத்தில் மொத்தம் 158 குவிண்டால் அரிசி வழங்கப்படுகிறது.

திரு. டி. மார்டின் : ஸ்பீக்கர் சார், நெல்லை மாவட்டத்தில் பாளையங்கோட்டையிலுள்ள சவேரியார் கல்லூரி, செயிண்ட் ஜான்ஸ் கல்லூரி, கிரிஸ் ராஜா ஆசிரியர் பயிற்சிப் பள்ளி ஆகிய இடங்களிலுள்ள ஹாஸ்டல் மாணவர்களுக்கு அதிகமான அரிசி தேவைப்படுகிறது. அதன் காரணமாக, அவர்களுடைய நிலங்களில் அவர்களுடைய சொந்த உபயோகத்திற்காக விளைவித்த நெல்லை அந்த விடுதிகளிலுள்ள மாணவர்கள் கொண்டு வருவதற்கு கலெக்டர் அவர்கள் தடை விதித்தது உண்மையா? அம்மாதிரி